**In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.**

E.A.3 of 2022 in E.P.No.14 of 2012 in O.S.No. 26 of 2004

தேதி-06.06.2025

(P.W.1) - ராஜமணி

**3** முதல் **7** வரையான எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. நான் செல்வராஜ் என்பவரின் சொத்தை ஜப்தி செய்ய வேண்டும் என்று மனுதாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்சொன்ன சங்கதியை பொறுத்து எனக்கும் செல்வராஜ்க்கும் இடையே நடந்து அதை மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தால் Special Leave to Appeal (Civil) No.(s). 7436/2010 என்ற வழக்கு முடிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்சொன்ன உத்தரவு நகல் வா.சா.ஆ. 49 ஆக குறியீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். அதில் என்னுடைய தரப்பில் நீதிமன்றத்தில் ஆஜரான வழக்கறிஞர் Status quo order was granted on 07.07.2010 but as he could not inform the same to the executing court, the possession was taken on 08.07.2010 and at that time even the machinery and other movables belonging to the petitioner were taken away by the respondent என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

2. மேற்சொன்ன உத்தரவில் the articles that had been taken into custody, while possession was delivered are listed in the Amin's Report dated 14.07.2010 and the petitioner is at liberty to take them at any point of time by giving acknowledgement என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட போது இந்நீதிமன்றத்தில் E.P.No. 11/2009 என்ற E.P.No. செல்வராஜ் தாக்கல் செய்து நிலுவையில் இருந்தது என்றால் தெரியும் அதை எதிர்த்துதான் மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தேன். இதே நீதிமன்றத்தில் நிறைவேற்று மனுவில் E.A.No.128/2010 in E.P.No. 11/2009 என்ற மனு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அந்த மனுவில் என்ன உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இந்நீதிமன்றம் எனக்கு எதிராக மேற்சொன்ன மனுவான E.A.No.128/2010 in E.P.No. 11/2009 தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அதுபற்றி ஞானபகம் இல்லை. மேற்சொன்ன தள்ளுபடி உத்தரவை மீறி மேல் முறையீடு செய்தானா என்றால் என்ன உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்று தெரியாது.

3. இதே நீதிமன்றத்தில் E.A.No.1/2019 in E.P.No. 14/2012 என்ற மனுவிலும் மேற்சொன்ன அதே பரிகாரத்தை கோரிதான் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். ஏற்கனவே இந்நீதிமன்றத்தால் மேற்சொன்ன பரிகாரம் கோரிய மனுவிற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னர் மீண்டும் அதே பரிகாரம் கேட்டு இதே நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. அதேபோல் செல்வராஜின் சொத்தை ஜப்தி செய்ய வேண்டும் என்று கோரியுள்ள மனுவும் நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. என் முதல் விசாரணையில் பத்தி எண். 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள விவரம் ஆன 07.07.2010 -ல் மாலை 9 மணிக்கு எதிர்மனுதாருக்கு அறிக்கை கொடுத்தாக சொல்லியுள்ள நிலையில் அதற்கான ஆவணம் ஏதும் தாக்கல் செய்தேனா என்றால் நீதிமன்ற ஆணையரிடம் அறிக்கை கொடுத்தேன் அதை அவர் வாங்க மறுத்துவிட்டார் ரூ.50,000/- கொடுக்க வேண்டும் என்று கூறினார்.

4. அதே பத்தியில் SLP.No. 7436/10 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டு 07.07.2010 அன்று இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்திருந்ததும் பிரதி தரப்பில் அதாவது Judgement creditor -க்கு வேண்டி வழக்கறிஞர்களும் ஆஜராகி உள்ளார்கள் என்று எதன் அடிப்படையில் சொல்லியுள்ளேன் என்றால் உத்தரவில் வழங்கப்பட்டதன் பேரில் சொல்லியுள்ளேன். ம.சா.ஆ.38 ஆவணமான 07.07.2010 அன்று வழங்கப்பட்ட உத்தரவில் மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் Mr. S. Beno Bencigar and Mr. M.A. Chinnasamy மட்டுமே ஆஜராகியுள்ளார்கள் என்றாலும் எதிர்மனுதாரர் தரப்பில் யாரும் ஆஜராகவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. உண்மைக்கு புறம்பாக நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக எதிர் மனுதாரர் ஆஜரானதாக பொய்யான சங்கதிகளை கொண்டு முதல் விசாரணை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

5. ம.சா.ஆ.1 ஆவணமான நீதிமன்ற ஆணையர் ஸ்டாண்லிஜோஸ் என்பவர் தாக்கல் செய்த அறிக்கையில் வழக்கு பட்டிகை சொத்தான கடைக்கு செல்லும் மின் இணைப்பு 05.07.2010 அன்று மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது என்றால் 06.07.2010 அன்று மாலை 5 மணிக்கு மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது சம்மந்தமாக மின் வாரிய ஊழியர்களிடம் ஏதாவது தகல் தெரிவித்தேனா என்றால் 05.07.2010 -ல் மின் வாரிய அலுவலத்தில் இருந்து எனக்கு அறிவிப்பு வழங்கப்பட்டது. அந்த அறிவிப்பில் 7 நாட்களுக்குள் பதில் வழங்கவேண்டும் என்று சொன்னார்கள் நான் பதில் கொடுப்பதற்குள் 06.07.2010 அன்று மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது.

6. ம.சா.ஆ.9 ஆவணத்தில் மின் வாரியத்தில் இருந்து வழங்கப்பட்ட அறிக்கையில் 3 தினங்களுக்குள் அறிக்கை பதில் தரவேண்டும் என்று அறிவிப்பு வழங்கப்பட்டது என்றாலும் அதை நான் 7 தினங்களாக திருத்தம் செய்து அந்த திருத்தம் ஏற்படுத்தப்பட்ட இடத்தில் எந்த ஒப்பமும் ஏற்படுத்தாமல் உள்ளதால் வழக்கிற்காக நான் பொய்யாக திருத்தம் செய்து தாக்கல் செய்த ஆவணம் என்றால் சரியல்ல. ஆணையர் அறிக்கையில் 07.07.2010 அன்று Junior Engineer. TNEB தன்னுடன் இருந்து மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது என்று சொல்லியிருந்தார் என்றால் இல்லை. மின்சார வாரியத்தில் இருந்து அவர்கள் வழங்கிய அறிக்கையின் அடிப்படையில் தான் 3 தினங்களுக்கு பிறகு மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

7. மின் இணைப்பு துண்டிப்பு ஏற்படுத்தப்பட்டபோது நான் வழக்கு பட்டிகை சொத்தில் இல்லை என்றால் சரிதான். எனக்கு எவ்வாறு விவரம் தெரியும் என்றால் வேலை ஆட்கள் சொன்னார்கள். மின் இணைப்பை போதிய காலஅவகாசம் வழங்காமல் துண்டித்துவிட்டார்கள் என்பது தொடர்பாக மின் வாரிய உயர் அதிகாரிகளிடம் புகார் ஏதும் அளித்தேனா என்றால் புகார் அளித்துள்ளேன். அது எந்த தேதியில் புகார் அளிக்கப்பட்டது, யாருக்கு வழங்கப்பட்டது மற்றும் அதனுடைய நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நேரடியாகதான் புகார் கொடுத்தேன் ஆனால் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்யவில்லை.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).